**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத் துறை**

**தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை**

**கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(09.11.2024 முதல் 13.11.2024)**

**அறிக்கைஎண் 64/2024** **தேதி. 08.11.2024**

## கரூர் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

கரூர் மாவட்டத்தின் 05.11.24 முதல் 07.11.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 33 - 34 °செ ஆகவும் இரவு நேர வெப்பநிலை 24 - 26 °செ ஆகவும் காலை நேரகாற்றின் ஈரப்பதம் 81 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 95 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7 - 9 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் வட கிழக்கு திசை வரை பதிவானது.

## எதிர்பார்க்கப்படும் வானிலை கரூர் (09.11.2024 முதல் 13.11.2024)

| கடந்த வார வானிலை (05.11.2024 முதல் 07.11.2024) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 13.11.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 05/11 | நாள்-2 06/11 | நாள்-3 07/11 | தேதி | நாள்-1 09/11 | நாள்-2 10/11 | நாள்-3 11/11 | நாள்-4 12/11 | நாள்-5 13/11 |
| 0.9 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 7 | 2 | 0 | 0 | 2 |
| 32 | 33 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 32 | 33 | 33 | 34 | 33 |
| 24 | 24 | 26 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 25 | 25 | 25 | 24 | 24 |
| 5 | 5 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 8 | 6 | 8 |
| 78 | 80 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 80 | 70 | 90 |
| 67 | 54 | 95 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 60 |
| 9 | 9 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 8 | 8 | 8 | 8 |
| கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | காற்றுவீசும் திசை | வட கிழக்கு | வடக்கு | வட வட மேற்கு | வடக்கு | வட கிழக்கு |

## கரூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். 09.11.2024, 10.11.2024 மற்றும் 13.11.2024 ஆகிய தினங்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32 - 34 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 24 - 25 °செ ஆகவும், காலைநேரகாற்றின் ஈரப்பதம் 90 சதவிகிதமாகவும், மாலை நேரகாற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்று மணிக்கு 8 - 10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும். காற்று பெரும்பாலும் வடக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும். |
| நெல் | நடவு வயல் | சம்பா நெற்பயிரில் 20 - 30 நாட்களுக்குள் ஒரு கைக்களை எடுக்கவும். |

| | | |
|---|---|---|
| | | இலை சுருட்டுப்புழுக்களின் அறிகுறிகள் (புழுக்களால் சுருண்ட இலைகள், வெள்ளையான சுரண்டப்பட்ட இலைகள்) குறிப்பிட்ட அளவில் தென்பட்டால், அதிக அளவு தழைச்சத்து உரத்தை இடுவதை தவிர்க்கவும், களைகளை கட்டுப்படுத்தவும் மற்றும் டிரைக்கோகிரேம்மா கிலோனிஸ் @ 2 CC நாற்ப்பதாயிரம் முட்டை ஒட்டுண்ணிள்/ ஏக்கர் என்ற அளவில் பயன்னடுத்தவும். பாசலான் 35 EC 1500 மிலி எக்டருக்கு அல்லது கார்போசல்பான் 6 % G குருனையை எக்டருக்கு 16.7 கிலோ தூவவும் அல்லது கார்டாப் ஹைட்ரோ குளோரைடு 50 % SP யை எக்டருக்கு 1 கிலோ தூவவும். |
| கால்நடைகள் | மாடு மற்றும் ஆடு | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக கறவை மாடுகளை பால்காய்ச்சல் நோய் தாக்கலாம். இதனை தவிர்க்க மாடுகளுக்கு 15 – 30 கிராம் கனிம கலவையை கருவுற்ற மாடுகளுக்கு கொடுக்கவும் |

## குறுஞ்செய்தி

மழை அளவை பொறுத்து, பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவதை தவிர்க்கவும் அல்லது தள்ளிபோடவும்.

**இயக்குநர்**